PAFFREL

දිනය -2020 ජුලි 30

<u>මාධ්‍ය වාර්තා අංක -20/පාර්ලිමේන්තු/03</u>

# පාර්ලිමේන්තු මහ මැතිවරණය-2020
# මැතිවරණ නිරීක්ෂණය

## මැතිවරණය හමුවේ අභියෝග

පාලනය කරන ලද කොවිඩ්-19 වසංගත තත්වයක් තුළ පවත්වන මෙවර පාර්ලිමේන්තු මැතිවරණය මැතිවරණ කොමිෂන් සභාවට මෙන්ම ඡන්ද දායකයන්ටද වඩාත්ම අභියෝගාත්මක මැතිවරණයක් වී ඇත. සෞඛ්‍යය ආරක්ෂිත ලෙස මැතිවරණය පැවැත්වීම සඳහා මැතිවරණ කොමිෂන් සභාව සහ අනෙකුත් රාජ්‍ය නිළධාරීන් ගේ කැපවීම සහ ධෛර්යය විශේෂයෙන්ම අගය කළ යුතුය.

## තැපැල් ඡන්දය-

පාර්ලිමේන්තු මැතිවරණයට අදාළව තැපැල් ඡන්ද සළකුණු කිරීම ජූලි 13, 14, 15, 16, 17, 20, 21, 24, 25, 29 යන දිනවලදී සිදු කරන ලදි. ඒ අනුව දීර්ඝතම තැපැල් ඡන්දය මෙවර දක්ණට ලැබුණු අතර ඒ සඳහා දින 10 ක කාලයක් ලබාදී තිබුණි. මෙවර තැපැල් ඡන්ද නිරීක්ෂණය සඳහා නිරීක්ෂකයින් 1000 යොදවා ගනිමින් පැෆ්රල් සංවිධානය විසින් නිරීක්ෂණය කරන ලදී. බරපතල සිදුවීම් කිසිවක් වාර්තා නොවූ තැපැල් ඡන්දයක් ලෙස මෙම තැපැල් ඡන්දය හඳුන්වා දිය හැකිය. නමුත් තැපැල් ඡන්ද දායකයන්ට ආයතන ප්‍රධානීන් විසින් බලපෑම් සිදුකිරීම් කිහිපයක් සහ තැපැල් ඡන්දය භාවිතා කළ පසු ඡායාරූපයට නැගීමේ අවස්ථා කිහිපයක් වාර්තා විය. තැපැල් ඡන්දය සෞඛ්‍යය ආරක්ෂිත විධිවිධාන අනුගමනය කරමින් පැවැත්වූ අතර ඒ සඳහා කැපවූ නිලධාරීන්ට මෙන්ම නොබියව ඡන්දය ප්‍රකාශ කළ ඡන්ද දායකයන්ටද පැෆ්රල් ප්‍රණාමය හිමිකරමු.

අප විසින් නිරීක්ෂණය කල ඡන්ද මධ්‍යස්ථාන අතරින් 99.09 % කම ඡන්දපොළ සැකසීමේ ක්‍රියාවලියේදී නිර්දේශ කර ඇති සෞඛ්‍ය මාර්ගෝපදේශ පිළිපැද ඇති බව වාර්තා විය. එසේම 99.09 % ඡන්දය දැමීමේ රහස්‍යභාවය ආරක්ෂා වන ලෙස ඡන්ද මධ්‍යස්ථානය සකසා තිබූ බව වාර්තා විය. ආබාධ සහිත ඡන්ද දායකයන් සඳහා ප්‍රවේශ පහසුකම් 74.36 % ක සළසා තිබූ අතර, එවැනි ඡන්ද දායකයන්ට ඡන්ද මධ්‍යස්ථාන 25.64 % ප්‍රවේශ පහසුකම් සලසා නොතිබුණ බව වාර්තා විය. නිරීක්ෂණය කල ඡන්ද මධ්‍යස්ථාන 1.45 % තුළ දේශපාලනඥයන්ගේ ඡායාරූප ප්‍රදර්ශනය කර තිබූ බව වාර්තා විය.


## මැතිවරණයට අදාළ කොවිඩ්-19 නියෝග

මැතිවරණය පැවත්වීමේදී අනුගමනය කළ යුතු සෞඛ්‍යමය විධිවිධාන 2020 අංක 1 දරන 2019 කොරෝනා වෛරස් රෝගය (කොවිඩ්-19) (ඡන්ද විමසීම්) නියෝග ලෙස සෞඛ්‍යය අමාත්‍යවරිය විසින් 2020 ජූලි 17 අංක 2184/34 දරණ අති විශේෂ ගැසට් පත්‍රයේ පළකරන ලදී. මෙම නියෝග පළකිරීම සම්බන්ධයෙන් මැතිවරණ කොමිෂන් සභාව මෙන්ම පැෆ්රල් සංවිධානය ද සෞඛ්‍යය අමාත්‍යවරියගෙන් දිගින් දිගටම ඉල්ලීම් සිදුකරන ලදී. කෙසේ නමුත් අපගේ ක්ෂේත්‍ර නිරීක්ෂකයන්ගේ වාර්ථා අනුව පැහැදිලි වූ කරුණක් වනුයේ මැතිවරණ ප්‍රචාරක රැස්වීම් සම්බන්ධයෙන් වන සෞඛ්‍යමය විධිවිධාන සම්බන්ධයෙන් දේශපාලන පක්ෂ සහ අපේක්ෂකයන් කිසිදු සැළකිල්ලක් නොදක්වන බවකි. දනට ඇති පැමිණිලි අතරින් සෞඛ්‍ය නිර්දේශ නොසළකා ප්‍රචාරක කටයුතු සිදු කිරීම දෙවැනි වන්නේ නීති විරෝධී ප්‍රචාරණවලට පමණි. එනම් සෞඛ්‍ය නිර්දේශ නොසළකා හැරීම පිළිබඳ පැමිණිලි 288 ක් වාර්තා විය. නිරෝධායන හා රෝග වැළැක්වීමේ ආඥා පනත අනුව මෙම නියෝග කඩකරන පුද්ගලයන්ව වැළැක්වීම සහ භාරයට ගැනීම පොලිස් නිළධාරීන්ගේ වගකීමක් වුවත් පොලිසිය එසේ ක්‍රියාකල බවට අපට වාර්තා නොවීය. මෙම හේතුව නිසා මතුවිය හැකි සෞඛ්‍යමය අනතුර මෙන්ම නිදහස් සහ සාධාරණ මැතිවරණයට විය හැකි බාධාවන් පිළිබඳව අවධාරණය කරමින් ජූලි 22 දින අප විසින් වැඩබලන පොලිස්පතිවරයා ගෙන් ලිඛිත ඉල්ලීමක් කලේ නියෝග බලාත්මක කිරීම සඳහා ක්‍රියාත්මක වන ලෙසයි. කෙසේ වුවත් අප යළි යලිත් දේශපාලන පක්ෂ සහ අපේක්ෂයන්ගෙන් ඉල්ලා සිටින්නේ සෞඛ්‍යමය නියෝග අනුගමනය කිරීමට සිය අනුගාමිකයන් පොළඹවන ලෙසයි.

එමෙන්ම මේ වන විට වෘත්තීය ක්‍රියාමාර්ගයක් මගින් ඇතැම් සේවාවලින් ඉවත්වී සිටි මහජන සෞඛ්‍ය පරීක්ෂකවරුන් නැවත වෘත්තීය ක්‍රියාමාර්ග අත හැර සියළු සහය ලබාදීමට මැතිවරණ කොමිෂන් සභාවට පොරොන්දු වී තිබීම නිදහස් සහ සාධාරණ මෙන්ම ඡන්ද දායකයින්ගේ සහ නිළධාරීන්ගේ ආරක්‍ෂාව කෙරෙහි සෘජුවම බලපාන අතර එකී පියවර පිළිබඳව මහජන සෞඛ්‍ය පරීක්ෂකවරුන්ට පැෆ්රල් සංවිධානයේ ප්‍රණාමය හිමිවේ.

## රාජ්‍ය දේපළ හා බලය අවභාවිතය

මෙවර මැතිවරණය තුළ ද රාජ්‍ය දේපළ හා බලය අව භාවිතය පිළිබඳ පැමිණිලි 76 ප්‍රමාණයක් අප වෙත වාර්තා වී ඇත. මේ යටතේ රජයේ වාහන, රාජ්‍ය නිලධාරීන්, ගොඩනැගිලි රජයේ සංවර්ධන ව්‍යාපෘති අපේක්ෂකයන් ප්‍රවර්ධනය කිරීම සඳහා කිරීම සඳහා භාවිතා වීම් වාර්තා විය. එමෙන්ම පත්කිරීම් හා මාරු කිරීම් පිළිබඳව ද වාර්තා වූ සිදුවීම් අතර උපාධිධාරීන් 50000 ක් බඳවා ගැනීමේ වැඩසටහන ගම් 15 දහසේ ප්‍රධාන ව්‍යාපෘතීන් සහ විවිධ ක්ෂේත්‍රවල නිලධාරීන් මාරු කිරීම් හා රාජ්‍ය නිලධාරීන් දේශපාලන කටයුතු සඳහා යොදා ගැනීම් වාර්තා විය. මෙම මැතිවරණ කාලය තුළ පොලිස් දෙපාර්තමේන්තුවේ මාරුවීම් සැළකිය යුතු ප්‍රමාණයක් සිදු වූ අතර ඒ පිළිබඳව පැෆ්රල් සංවිධානය තොරතුරු දන ගැනීමේ පනත යටතේ පොලිස් දෙපාර්තමේන්තුවෙන් තොරතුරු විමසා ඇත. එමෙන්ම සෞඛ්‍ය ක්ෂේත්‍රයේ මාරුවීම් පිළිබඳව ද විශේෂයෙන්ම විශේෂඥ වෛද්‍යවරුන් මාරු කිරීම පිළිබඳව ද අප වෙත පැමිණිලි ලැබී තිබේ.




## නව සංවර්ධන යෝජනාක්‍රම ආරම්භ කිරීම්

පොදු සම්පත් දේශපාලන පක්ෂ ප්‍රවර්ධනය ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාව අනුව වරදක් වන බව ඒ පිලිබඳව විධිමත් විධානයන් මැතිවරණ කොමිෂන් සභාව විසින් 2020 ජූලි මස 06 දින නිකුත් කරන ලද අති විශේෂ ගැසට් පත්‍රයේ දක්වා ඇත. එහි පැහැදිලි ලෙස සඳහන් වන්නේ නව ව්‍යාපෘති සහ විවෘත කිරීම් සිදුකරන්නේ නම් මැතිවරණ කොමිෂන් සභාවේ අවසරය ලබාගත යුතු බවත් එසේ සිදුකරනු ලබන උත්සවවලදීද පක්ෂ ප්‍රවර්ධනයක් නොවන ලෙස කටයුතු කිරීම නිළධාරීන්ගේ වගකීමක් බවයි. නමුත් අපගේ නිරීක්ෂණයන් වන්නේ මෙම විධානයක් කඩකිරීම් දිවයිනේ සියලුම ප්‍රදේශවල සිදුවන බවයි. මෙවැනි සිදුවීම් රැසක් පිලිබඳවම පැෆ්රල් සංවිධානය මේවන විටත් මැතිවරණ කොමිෂන් සභාව වෙත පැමිණිලිකර තිබේ. රාජ්‍ය නිළධාරීන්ගෙන් පැෆ්රල් සංවිධානය ඉල්ලා සිටින්නේ නිදහස් සාධාරණ මැතිවරණයක් පැවැත්වීම සඳහා මැතිවරණ කොමිෂන් සභාවේ විධානයන්ට අනුගතව කටයුතු කරන ලෙසයි.

## උපක්‍රමික දේශපාලන ප්‍රචාරයන්

ප්‍රචාරක කටයුතු මැතිවරණ පනතේ ප්‍රතිපාදන අනුකූලව පමණක් සිදුකිරීමට මැතිවරණ කොමිෂන් සභාව තීරණය කිරීමත් සමගම ඇතැම් අපේක්ෂකයින් පනතේ ප්‍රතිපාදන අතරින් රිංගා ගොස් විවිධ උපක්‍රම භාවිතා කරමින් ප්‍රචාරක කටයුතුවල යෙදෙන බවට ක්ෂේත්‍ර නිරීක්ෂකයින්ගෙන් ලැබෙන වාර්තාවලින් පැහැදිලි වේ.

විශේෂයෙන්ම අපේක්ෂකයන්ගේ අනවර්ථ නාම නිර්මානය කරගත් නාමයන් සහ සංකේත භාවිතා කරමින් මෙම ප්‍රචාරයන් සිදුකරන බව වාර්තා වෙයි. එමෙන්ම ලොතරැයි අළෙවි නියෝජිතයන් හරහා ජය අංක ලෙස අපේක්ෂක අංක ප්‍රකාශයට පත් කරනු ලබන බවට කුරුණෑගල දිස්ත්‍රික්කයෙන් වාර්තා විය.

එසේම අපේක්ෂකයන්ගේ නම, සලකුණ සහ අංකය සටහන් කරන කාබන් පෑන් ඡන්ද දායකයන්ට බෙදා හැරීම් මෙන්ම එම පෑන් ඡන්දය සලකුණු කිරීම සඳහා රැගෙන යන ලෙස උපදෙස් දී ඇති බව කළුතර, බදුල්ල, රත්නපුර, ගාල්ල ආදී  දිස්ත්‍රික්ක වලින් වාර්තාවෙයි. කොවිඩ්-19 වසංගත තත්වයක් තුල ඡන්දය සලකුණු කිරීම සඳහා පෑනක් ගෙන ඒමට නියම කර ඇති වාතාවරණයක් තුල මෙම පෑන් ඡන්දය මධ්‍යස්ථාන තුලට ගෙන ඒම මගින් නීති විරෝධි ඡන්ද ප්‍රචාරයක් සඳහා ඡන්දදායකයන් පෙළඹවීමක් වේ. එබැවින් අ පසියලු ඡන්ද දායකයන්ගෙන් ඉල්ලා සිටින්නේ අපේක්ෂකයන්ගේ සලකුණු හා අංක සහිත කිසිවක් ඡන්ද මධ්‍යස්ථාන වෙත රැගෙන නොඑන ලෙස ඉල්ලා සිටිමු.


මෙවර මැතිවරණයේදී පැෆ්රල් සංවිධානය කොවිඩ් 19 තත්ත්වය  සැළකිල්ලට ගනිමින් තාක්ෂණය භාවිත කිරීම කෙරෙහි වැඩි අවධානයක් යොමු කරනු ලැබීය. ඒ අනුව අපගේ තොරතුරු ලබා ගැනීම හා විශ්ලේෂණය (analysis) කිරීම ඇප් (APP) එකක් හරහා  සිදු කිරීමට අප සමත් වී තිබේ.  එමෙන්ම කාන්තා අපේක්ෂිකාවන් මුහුණදෙන ගැටළු හඳුනාගෙන ඒ සඳහා දීර්ඝකාලීන වැඩපිළිවෙලක් සැකසීමට අප අපේක්ෂා කරමු. ඊට අමතරව ඡන්ද දායකයන් දැනුවත් කිරීම සඳහා විශේෂයෙන්ම අඩු අවධානයක් සහිත ජන ප්‍රජාව ඉලක්ක කරගනිමින් වැඩමුළු 100 ක් සහ විද්‍යුත් හා මුද්‍රිත මාධ්‍ය හා සමාජ මාධ්‍ය භාවිත කරමින් ජනතාව දැනුවත් කිරීමේ කටයුතු අප දැනටමත් අරඹා ඇත.

## නිරෝධායන මධ්‍යස්ථාන වල ඡන්දය


මැතිවරණයකදී කිසිවෙකු මග නොහැරීම ඉතාමක් ප්‍රජාතන්ත්‍රවාදී ලක්‍ෂණයකි කොවිඩ් -19 නිරෝග අනුව නිරෝධානයන මධ්‍යස්ථානවලද, ස්වයං නිරෝධායන නිවාසවලද සිටින ඡන්ද දායකයන්ගේ ඡන්දය භාවිතා කිරීම සඳහා අවශ්‍ය පහසුකම් සැලසීම සඳහා මැතිවරණ කොමිසන් සභාව තීරණය කිරීම පැෆ්රල් සංවිධානය අතිශයින් අගයකරන අතර එකී ක්‍රියාවලිය නිරීක්‍ෂණය කිරීමටද පැෆ්රල් සංවිධානය සැලසුම්කර තිබේ.

## මැතිවරණය ආශ්‍රිත සිදුවීම් පිළිබඳ නිරීක්ෂණය


මෙවර මැතිවරණයේ වැඩිම පැමිණිලි ලැබී ඇත්තේ නීති විරෝධී මැතිවරණ ප්‍රචාරයන් සම්බන්ධයෙනි. 2020 ජූලි 29 වන දින වන විට ලැබි ඇති මැතිවරණය ආශ්‍රිත පැමිණිලි ප්‍රවර්ගයන් අනුව පහත පරිදි වේ.




බරපතල ප්‍රචණ්ඩ ක්‍රියා සිදුවීම් අතරින් සිදුවීම් 18 කදී රෝහල්ගතවීම් වාර්තා විය. ඒ අනුව ප්‍රචණ්ඩක්‍රියා හේතුවෙන් රෝහල්ගතවූ පුද්ගලයන් සංඛ්‍යාව 32කි. එසේම මෙම බරපතල ප්‍රචණ්ඩක්‍රියා අතරින් සිදුවීම් 14ක් ප්‍රතිවිරුද්ධ දේශපාලන පක්ෂ ආධාරකරුවන් අතර සිදුවූ සිදුවීම් වන අතර සිදුවීම් 9ක් එකම පක්ෂයන්හි ආධාරකරුවන් අතර සිදුවූ ප්‍රචණ්ඩ ක්‍රියාවන් වේ.




(මෙම පැමිණිලි වලින් බහුතරය නීති විරෝධී ප්‍රචාරණ කටයුතුවලට අදාළව ය.)




## ඡන්දදායකයින්ගෙන් සිදුකරණ ආයාචනය

ඡන්ද මධ්‍යස්ථාන සඳහා ඉතා ආරක්ෂාකාරී සෞඛ්‍ය ආරක්ෂක විධිවිධාන අනුගමනය කිරීමට මැතිවරණ කොමිෂන් සභාව සහ සෞඛ්‍ය අංශ පියවර ගෙන තිබේ. එබැවින් නොබියව ඡන්දය භාවිතා කිරීමට පැමිණෙන ලෙසත් වලංගු හැදුනුම්පත් පිළිබඳව සැලිකිළි මත් වන ලෙසත් සිය නිළ ඡන්ද දැන්වීම් පත්‍රිකාව මේ වන විටත් තැපැල් මගින් ලැබී නොමැතිනම් තැපැල් කාර්යාලයට ගොස් එය ලබාගන්නා ලෙසත් ඉල්ලා සිටිමු. මෑතකදී විදේශයක සිට පැමිණියේ නම් ඡන්ද මධ්‍යස්ථානයට යන විට මෙරටට පැමිණිමේදී භාවිතා කරන ලද විදේශ ගමන් බලපත්‍රය රැගෙන යන ලෙසද මතක් කර සිටිමු.

යළි යළිත් අප ඡන්දදායකයන්ට සිහිපත් කරන්නේ සිය වටිනා ඡන්දය භාවිතා කිරීමේදී සහ මනාප සලකුණු කිරීමේදී මාර්තු 12 නිර්ණායක පිලිබඳව සැලකිලිමත් වන ලෙසයි.

PAFFREL

திகதி - 2020 ஜுலை 30

<u>ஊடக அறிவித்தல் - 20 பாராளுமன்ற/03</u>

# பாராளுமன்றத் தேர்தல் 2020

# தேர்தல் அவதானிப்பு

### தேர்தலை நடத்துவதிலுள்ள சவால்கள்

கட்டுப்படுத்தப்பட்டுள்ள கோவிட் 19 சூழ் நிலைமையில் இம்முறை நடத்தப்படுகின்ற பாராளுமன்றத் தேர்தலானது தேர்தல் ஆணைக்குழுவுக்கும் வாக்காளர்களுக்கும் மிகவும் சவாலான ஒன்றாக மாறியுள்ளது. சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு மற்றும் ஏனைய அரச உத்தியோகத்தர்கள் காட்டிவரும் அர்ப்பணிப்பு மற்றும் துணிச்சலைப் பாராட்ட வேண்டும்.

### தபால் வாக்கு

பாராளுமன்றத் தேர்தலில் தபால்மூல வாக்கெடுப்பு ஜுலை மாதம் 13, 14, 15, 16, 17, 20, 21, 24, 25, 29 ஆகிய திகதிகளில் நடத்தப்பட்டது. அதன்படி இம்முறை தபால் மூல வாக்கெடுப்பு மிக நீண்டதாகவும் பத்து நாட்களைக் கொண்டதாகவும் அமைந்திருந்தது. ப:ஃவ்ரல் நிறுவனம் தபால் மூல வாக்கெடுப்பில் 1000 அவதானிப்பாளர்களை ஈடுபடுத்தி அவதானிப்பை மேற்கொண்டது. இம்முறை தபால் மூல வாக்கெடுப்பில் பாரதூரமான எந்தவொரு சம்பவமும் நடைபெறவில்லை என்பதை குறிப்பிட வேண்டும். எனினும், தபால் வாக்காளர்கள் மீது ஒரு சில நிறுவனத் தலைவர்கள் அழுத்தம் பிரயோகித்திருந்ததையும், தபால் வாக்களித்த பின்னர் வாக்குச்சீட்டை நிழற்படமெடுத்திருந்த சில சந்தர்ப்பங்களும் அறிவிக்கப்பட்டன. தபால் வாக்கெடுப்பானது சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நடத்தப்பட்டிருந்ததோடு அதற்காக தமது காத்திரத்தை வெளிப்படுத்திய உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் துணிச்சலுடன் வாக்களித்த வாக்காளர்களுக்கும் ப:ஃவ்ரல் நிறுவனம் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

எம்மால் அவதானிக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையங்களின் 99.09 சதவீதமான நிலையங்களில் வாக்குச்சாவடியினை அமைக்கும் செயற்பாடுகள் பரிந்துரைக்கப்பட்ட சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைவாக இருந்தன. 99.09% வாக்களிப்பின் போது இரகசியத்தன்மை பேணப்படும் வகையில் வாக்குச்சாவடி அமைக்கப்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டது. 74.36 சதவீதமான வாக்கெடுப்பு நிலையங்களில் அங்கவீனமுற்ற நபர்களுக்கான நுழைவு வசதி செய்யப்பட்டிருந்ததுடன், 25.64 சதவீதமான வாக்கெடுப்பு நிலையங்களில் அந்த வசதி காணப்படவில்லை. அவதானிப்பு மேற்கொள்ளப்பட்ட 1.45 சதவீதமான வாக்கெடுப்பு நிலையங்களில் அரசியல்வாதிகளின் உருவப்படங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டது.

### தேர்தல் தொடர்பான கோவிட் 19 ஒழுங்குவிதிகள்


தேர்தலை நடத்தும்போது பின்பற்ற வேண்டிய சுகாதார ஏற்பாடுகள் 2020 ஆம் ஆண்டின் 01 இலக்க கொரோனா வைரஸ் தொற்றுநோய் (கோவிட் 19) தேர்தல்கள் ஒழுங்குவிதிகளாக சுகாதார அமைச்சரினால் 2020 ஜுலை மாதம் 17 ஆம் திகதி 2184/34 இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டது. இந்த ஒழுங்கு விதிகளை வெளியிடுவது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு சுகாதார அமைச்சரிடம் தொடர்ச்சியான கோரிக்கையை முன்வைத்தது. எவ்வாறாயினும், தேர்தல் கூட்டங்கள் தொடர்பான சுகாதார ஏற்பாடுகள் பற்றி அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் எந்த விதத்திலும் கவனம் செலுத்தவில்லை என்ற விடயம் எமது கள அவதானிப்பு அறிக்கைகள் மூலம் தெளிவாகிறது. தற்போது முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகளில்படி சட்டவிரோத பிரசாரங்களுக்கு அடுத்த நிலையில் சுகாதார பரிந்துரைகளைக் கடைபிடிக்காது முன்னெடுக்கப்பட்ட பிரசாரங்கள் பற்றிய முறைப்பாடுகள் காணப்படுகின்றன. அதாவது, சுகாதார பரிந்துரைகளைப் பின்பற்றாமல் தொடர்பில் 288 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த் தடுப்பு தொடர்பான கட்டளைச் சட்டத்திற்கு அமைய ஒழுங்கு விதிகளை மீறுகின்ற நபர்களைத் தடுத்து நிறுத்துதல் மற்றும் பொறுப்பின் கீழ் கொண்டு வருதல் பொலிஸ் உத்தியோகத்தர்களின் பொறுப்பாக இருப்பினும் பொலிசார் அதற்கமைய செயற்பட்டதாக தெரியவில்லை. இதன் காரணமாக ஏற்படக்கூடிய சுகாதார ரீதியான அனர்த்தம் மற்றும் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலில் ஏற்படக்கூடிய தடைகளைச் சுட்டிக்காட்டிய நாம் பதில் கடமையாற்றும் பொலிஸ் மா அதிபரிடம் எழுத்திலான கோரிக்கையை முன்வைத்து ஒழுங்கு விதிகளை வலுவுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டோம். ஆயினும், சுகாதார ஒழுங்கு விதிகளைப் பின்பற்றுவதற்கு தமது ஆதரவாளர்களை தூண்டுமாறு நாம் மீண்டும் மீண்டும் அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களை கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோல், இன்றளவில் தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுத்து ஒருசில சேவைகளிலிருந்து விலகியுள்ள பொது சுகாதார பரிசோதகர்கள் தொழிற்சங்க நடவடிக்கையை கைவிட்டு தேர்தல் ஆணைக்குழுவுக்கு சகல விதத்திலும் ஒத்துழைப்பு வழங்குவதாக வாக்குறுதி அளித்துள்ளதுள்ளமை சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் மற்றும் வாக்காளர்கள் அத்துடன் உத்தியோகத்தர்களின் பாதுகாப்பில் நேரடி செல்வாக்கினைச் செலுத்துகின்றது. ஆகவே, அவர்களின் அந்த நடவடிக்கையை பஃவ்ரல் நிறுவனம் பாராட்டுகின்றது.

### அரச சொத்துக்கள் மற்றும் அதிகார துஸ்பிரயோகம்

இதுவரையான காலப்பகுதியில் அரச சொத்துக்கள் மற்றும் அதிகார துஸ்பிரயோகம் தொடர்பான எழுபத்தாறு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இதன் கீழ் அரசாங்க வாகனங்கள், வேட்பாளர்களை ஊக்குவிக்கும் வகையில் அரசு அதிகாரத்தார் அபிவிருத்தி கருத்திட்டங்களை முன்னெடுத்துள்ளமை பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல் நியமனங்கள், இடமாற்றங்கள் தொடர்பிலும் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் 50000 பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்யும் நிகழ்ச்சித்திட்டம், 15000 கிராமங்கள் நிகழ்ச்சித்திட்டம் போன்ற முக்கியமான கருத்திட்டங்கள் அத்துடன் பல்வேறு உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இடமாற்றங்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களை அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தியுள்ளமையும் அறிவிக்கப்பட்டுள்ளது. இம்முறை தேர்தல் காலப்பகுதியில் பொலிஸ் திணைக்களத்தில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளதோடு பஃவ்ரல் நிறுவனம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் அதுபற்றிய தகவல்களை பொலிஸ் திணைக்களத்திடம் கோரியுள்ளது. சுகாதாரத்துறையில் வழங்கப்பட்டுள்ள இடமாற்றங்கள் பற்றியும் எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

.




## புதிய அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்படல்

அரசியல் கட்சிகளை ஊக்குவிப்பதற்காக பொதுச் சொத்துக்களை பயன்படுத்துதல் அரசியலமைப்பின்படி தவறானது என்பதை குறிப்பிட்டு தேர்தல் ஆணைக்குழு அது தொடர்பான கட்டளை ஒன்றை 2020 ஜூலை மாதம் வர்த்தமான பத்திரிகை மூலம் வெளியிட்டுள்ளது. அதில், புதிய கருத்திட்டங்கள் மற்றும் அங்குரார்ப்பண நிகழ்வுகள் நடத்தப்படுமானால் அதற்கு தேர்தல் ஆணைக்குழுவின் அனுமதியை பெறவேண்டும் எனவும், அவ்வாறு நடத்தப்படுகின்ற நிகழ்வுகளை கட்சிகள் ஊக்குவிக்கப்படும் விதமாக நடத்தாதிருத்தல் உத்தியோகத்தர்களின் பொறுப்பு எனவும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. நாட்டின் சகல பாகங்களிலும் இக்கட்டளை மீறப்படுவதை எம்மால் அவதானிக்க முடிந்ததுள்ளது. பஃவ்ரல் ஏற்கனவே இவ்வாறான பல சம்பவங்கள் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளது. அதேபோல் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடத்துவதற்காக தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்படுகின்ற கட்டளைகளுக்கு அமைவாக செயற்படுமாறு பஃவ்ரல் சகல அரச உத்தியோகத்தர்களையும் கேட்டுக் கொள்கிறது.

## தந்திரோபாய தேர்தல் பிரசாரம்

பிரசார நடவடிக்கைகளை தேர்தல் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவான விதத்தில் மாத்திரம் மேற்கொள்வதற்கு தேர்தல் ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்பட்டதையடுத்து ஒரு சில வேட்பாளர்கள் சட்ட ஏற்பாடுகளை தமக்கு சாதகமாக பயன்படுத்தி தந்திரோபாயங்களைக் கையாண்டு பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்வதாக கள அவதானிப்பாளர்களிடமிருந்து கிடைக்கின்ற அறிக்கைகள் மூலம் தெளிவாகிறது.

குறிப்பாக மாறுபட்ட பெயர்கள் மற்றும் சின்னங்களைப் பயன்படுத்தி இவ்வாறான பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் லொத்தர்ச் சீட்டு விற்பனை முகவர்கள் ஊடாக வெற்றிக்குரிய இலக்கமாக வேட்பாளரின் இலக்கத்தை தெரியப்படுத்தும் நிகழ்வுகள் குருநாகல் மாவட்டத்தில் இடம்பெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வேட்பாளரின் பெயர், சின்னம் மற்றும் இலக்கம் அடங்கிய *காபன்* பேனைகளை வாக்காளர்களுக்கு வழங்குதல் மற்றும் அவற்றை வாக்களிப்பதற்காக எடுத்துச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக பல பிரதேசங்களிலிருந்து அறிவிக்கப்படுகின்றது. கோவிட் 19 தொற்று சூழ்நிலைக்கு மத்தியில் வாக்களிக்கச் செல்லும்போது பேனை ஒன்றை எடுத்துச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ள நிலையில், இவ்வாறான பேனைகளை வாக்களிப்பு நிலையத்திற்கு அடுத்து வருவது சட்டவிரோத தேர்தல் பிரசார நடவடிக்கையாகவும், வாக்காளர்களை தூண்டும் செயலாகவும் அமைகின்றது. ஆகவே, வேட்பாளர்களின் சின்னங்கள் மற்றும் இலகங்கள் அடங்கிய எந்த ஒரு பொருளையும் வாக்களிப்பு நிலையத்திற்கு எடுத்து செல்ல வேண்டாமென நாம் வாக்காளர்களை கேட்டுக்கொள்கின்றோம்“

ப.்.வ்ரல் அமைப்பு இத்தேர்தலில் கோவிட் 19 நிலைமையை கவனத்தில் கொண்டு தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது குறித்து அதிக கவனம் செலுத்தி வருகின்றது. எங்களது தகவல் பெறும் நடவடிக்கை மற்றும் பகுப்பாய் **(analysis)**வினை செயலி **(app)** ஒன்றின் ஊடாக நாம் மேற்கொண்டு வருகின்றோம். அதேபோல் பெண் வேட்பாளர்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளை அடையாளம் கண்டு அதற்காக நீண்டகால வேலைத்திட்டமொன்றைத் தயாரிக்க எதிர்பார்த்துள்ளோம். இதற்கு மேலதிகமாக வாக்காளர்களை விழிப்புணர்வு செய்யும் நோக்கத்துடன் குறைந்த அளவில் கவனம் குவிக்கப்படுகின்ற சமூகத்தினரை இலக்காகக் கொண்டு 100 செயலமர்வுகள் மற்றும் இலத்திரனியல் அச்சு ஊடக அத்தோடு சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தி மக்களை விழிப்புணர்வு செய்யும் நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.


## தனிமைப்படுத்தும் நிலையங்களான தேர்தல்

தேர்தல் ஒன்றில் சகல தரப்பினரையும் உள்ளடக்குவது மிகச் சிறந்த பண்பாகும். கோவிட் 19 ஒழுங்கு விதிகளின்படி தனிமைப்படுத்தல் நிலையங்கள், வீடுகளில் சுய தனிமைப்படுத்தலில் உள்ள வாக்காளர்கள் வாக்களிப்பதற்காக தேர்தல் ஆணைக்குழு ஏற்பாடுகளைச் செய்ய தீர்மானித்திருப்பதை ப.்.வ்ரல் நிறுவனம் வெகுவாக பாராட்டுகின்றது. அதேபோல் அச் செயற்பாடுகளை அவதானிப்பதற்கும் ப.்.வ்ரல் திட்டமிட்டுள்ளது.


## தேர்தல் சார்ந்த சம்பவங்கள் பற்றிய அவதானிப்பு

இம்முறை சட்டவிரோத தேர்தல் பிரசாரம் தொடர்பில் அதிகமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. 2020 ஜூலை 29ஆம் திகதி அளவில் கிடைத்துள்ள முறைப்பாடுகள் தொடர்பான விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.


2020.06.14.முதல் 2020.07.29 முற்பகல் 10.30 வரை




பாரதூரமான வன்முறைச் சம்பவங்களின் 18 சம்பவங்களில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, வன்முறைகள் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை32. அதேபோல் பாரதூரமான வன்முறைச் சம்பவங்களின் 14 சம்பவங்கள் எதிர்தரப்பு அரசியல் கட்சி ஆதரவாளர்களுக்கு இடையில் ஏற்பட்டுள்ளதோடு 09 சம்பவங்கள் ஒரே கட்சியைச் சேர்ந்த ஆதரவாளர்களுக்கு இடையில் ஏற்பட்டுள்ளது



**வாக்காளர்களிடம் முன்வைக்கப்படும் வேண்டுகோள்**




வாக்கெடுப்பு நிலையங்களில் மிகவும் பாதுகாப்பான சுகாதார நடை முறைகளை பின்பற்றுவதற்கு தேர்தல் ஆணைக்குழுவும், சுகாதார பிரிவினரும் நடவடிக்கை எடுத்துள்ளன. ஆகவே, அச்சமின்றி வாக்களிக்கச் செல்லுமாறும், செல்லுபடியாகும் அடையாள அட்டை தொடர்பில் கவனம் செலுத்துமாறும், உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை இதுவரை கிடைக்கவில்லை எனின், தபால் நிலையத்திற்கு சென்று அதனைப் பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றோம். வெளிநாடுகளிலிருந்து சமீபத்தில் நாடு திரும்பியவர்கள் வாக்களிப்பு நிலையத்திற்கு செல்லும் போது கடவுச் சீட்டினை எடுத்து செல்லுமாறு நினைவூட்டுகிறோம்.

தமது வாக்கினை அளிக்கும்போதும் விருப்பு வாக்கினை அளிக்கும்போதும் மார்ச் 12 அளவுகோல்கள் தொடர்பில் கவனம் செலுத்துமாறு வாக்காளர்களுக்கு மீண்டும் மீண்டும் நினைவூட்டுகிறோம்.